ICCM-2016

PROCEEDINGS

3rd International Conference on Contemporary Management

"Critical Solutions for Contemporary Issues"

Faculty of Management Studies and Commerce
University of Jaffna, Sri Lanka
28th & 29th July, 2016

3rd International Conference on Contemporary Management (ICCM)-2016

©Copy Right 2016 Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

Published by: Faculty of Management Studies and Commerce, University of Jaffna, Sri Lanka

URL : www.jfn.ac.lk/iccm

e-mail: : iccmuoj@gmail.com

T.P : 0094(0)212223610

Printers : Guru Printers Thirunelvely, Jaffna, Sri Lanka.

ISSN : 2448 - 9883

Disclaimer:

Responsibilities for content of the full papers included in the publication remain with respective authors.

Proceeding of International Conference on Contemporary Management - 2016 (ICCM-2016), pp 28-38

யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைப்பு (1930 - 1960) - சமகாலத் தமிழ் பத்திரிகைகள் ஊடான வரலாற்றுப் பார்வை

அருந்தவராஜா. க

ஆய்வுச்சுருக்கம்

இலங்கையின் வடபகுதியில் அமைந்து பாரம்பரிய பொருளாதார பண்பாட்டு நிறுனங்களுடன் அடையாளங் காணப்படுகின்ற பிரதேசமாக யாழ்ப்பாணப் பிரதேசம் காணப்படுகின்றது. இத்தகைய பிரதேசத்தினுடைய வளர்ச்சியில் அல்லது அபிவிருத்தியில் அதனது பொருளாதார நடவடிக்கைகள் பிரதான இடத்தினைப் பெற்றுள்ளன. யாழ்ப்பாண அரசர்களுடைய காலத்திலும்சரி பின்வந்த ஐரோப்பியர்களது ஆட்சிக்காலத்திலும்சரி அவர்களினால் யாழ்ப்பாணப் பிரதேசத்தினது பொருளாதாரத்தின் அடிப்படையினைத் தென்னிலங்கையிலோ அல்லது மலைநாட்டிலோ மேற்கொண்டதனைப் போன்று மாற்ற முடியவில்லை. மாறாக அவற்றுடன் இணைந்த வகையிலே தான் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் அவர்கள் தமது பொருளாதார நகர்வினயும் சுரண்டலையும் மேற்கொண்டு வந்தனரென்பதே உண்மை. இதற்கு இறுதியாக 1948 வரை இலங்கை முழுவதிலும் ஆதிக்கத்தினைச் செலுத்திய ஆங்கிலேயர்களும் விதிவிலக்காக அமையவில்லை. இத்தகைய ஆங்கிலேயரது ஆட்சிக்காலத்தின் இறுதிப் பகுதியளவில் (1930களில்) தமிழ் மக்களைச் சகல துறைகளிலும் முன்னேற்ற வேண்டுமென்ற நோக்கத்தினைப் பிரதானமாகக் கொண்டு இலங்கையிலிருந்து வெளிவர ஆரம்பித்த வீரகேசரி, தினகரன், ஈழகேசரி போன்ற தமிழ் தினசரி மற்றும் வார வெளியீடுகளின் ஊடாக அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் காணப்பட்ட பொருளாதாரநிலை பற்றியும் அவற்றினை முன்னேற்றச் செய்யும் பொருட்டு அவை தெரிவிக்கின்ற கருத்துக்கள் பற்றியும் அறிய முடிகின்றது. சமகாலத்தில் பிற தமிழ் பத்திரிகைகள் சிலவும் வெளிவந்து கொண்டிருந்தாலும் கூட அவை மத சார்பானவையாகவோ, தொழிலாளர்களது நலன்கள் சார்பானவையாகவோதான் அதிகளவில் இருந்தன. அதனால் அவை பற்றிய செய்திகளே அவற்றில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது. எனவே இப்பத்திரிகைகள் மூன்றும் கொண்டிருந்த நோக்கங்களில் யாழ்ப்பாணத்தினது பொருளாதார அபிவிருத்தியும் ஒன்றென்பது அவதானிக்கத்தக்கது. இவை அவ்வப்போது தமது வெளியீடுகளின் மூலமாகத் தேசத்தின் பொருளாதாரத்தினை உயர்த்துவதற்கான ஆலோசனைகளை அரசிற்கும் மக்களுக்கும் தெரிவித்துவந்தன. இக்கால (1930-1960) அதாவது இப்பத்திரிகைகள் வெளிவந்தகால யாழ்ப்பாணத்தினது பொருளாதார நிலையினை அறிய விரும்புகின்ற எவரும் இப்பத்திரிகைகளை ஒதுக்கிவிட்டுச் செல்லமுடியாது. முழுக்க முழுக்க வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் அமையப்பெற்ற இவ்வாய்வில் முதற்தர மற்றும் இரண்டாம்நிலை ஆதாரங்கள் ஆய்வின் தேவை கருதிப் பயன்படுத்தப்பட்டுள்ளன. முதற்தர ஆதாரங்களில் பிரதான இடத்தினைப் பெறுவது வீரகேசரி, தினகரன் மற்றும் ஈழகேசரி பத்திரிகைகளே. அதாவது ஆய்வும் அப் பத்திரிகைகளை அடிப்படையாகக் கொண்டதாகக் காணப்படுவதனால் அவையே முதற்தர ஆதாரமாக ஆய்வில் கையாளப்படுகின்றன. பின்னாளில் முதற்தரச் சான்றான இப்பத்திரிகைகளை அடிப்படையாக வைத்து எழுந்த நூல்கள், கட்டுரைகள், இணையத்திலிருந்து பெறப்பட்ட தரவுகள் போன்றன இரண்டாந்தர ஆதாரங்கள் வரிசையில் வைத்து நோக்கப்படுகின்றன. ஆய்வில் பல பிரச்சினைகள்

வரலாற்றுத்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். arunn.msu@gmail.com

எழுந்தாலும்கூட அவற்றில் பிரதான பிரச்சினையாகக் காணப்படுவது இப்பத்திரிகைகளின் பல வெளியீடுகள் அழிந்த நிலையில் காணப்பட்டதே. மேலும் இதற்கு முன்னோடியான ஆய்வுகள் என்று நேரடியாகக் குறிப்பிட்டுச் சொல்லுமளவிற்கு எவையுமில்லையென்பதும் அவதானிக்கத்தக்கது. அவ்வகையில் இதுவே முன்னோடியான ஆய்வாகவும் அமைகின்றது. இவ்வாய்வானது பல நோக்கங்களைக் கொண்டமைந்துள்ளது. எதிர்கால ஆய்வாளர்களுக்கு ஒரு முன்னோடியான ஆய்வாக அமைந்து அவர்களுக்கு வழிவிட வேண்டுமென்பதுடன் அக்கால யாழ்ப்பாணத்தினது பொருளாதார நிலையின் தன்மைகள், அவற்றினது எழுச்சி, வீழ்ச்சி, வருவாய் என்பனவற்றினை இனங்காண்பதும் ஆய்வினது ஏனைய துணை நோக்கங்களாக உள்ளன. எனவே இப்பத்திரிகைகள்மூன்றும் அவை தருகின்ற கருத்துக்களும் யாழ்ப்பாணப் பிரதேசத்தினது அக்காலப் பொருளாதாரத்தினை அறிந்துகொள்ளுவதற்கான முக்கியமான முதற்தர ஆவணமாக இருக்கின்றதென்பதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

திறவுச்சொற்கள் : விவசாயம், மலையாளப் புகையிலை வியாபாரம்,சுதேசியம், கைத்தொழில், கடலேரித்திட்டம்

1. அறிமுகம்

ஒரு ஜனநாயக அரசினது முக்கியமான மூன்று கூறுகளாகச் சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை என்பன காணப்படுகின்றன. இந்நிலையில் மக்களது உரிமைகளைக் காத்து அரசியலை நெறிப்படுத்துகின்ற துறைகளிலொன்றாகப் பத்திரிகைகள் காணப்படுவதனால் பத்திரிகைகள் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கொள்ளப்படுகின்றன. (ஆனந்தராஜ்,ந., 2002,ப.06) அவ்வ கையில் இப்பத்திரிகைகள் மூன்றும் தோன்றிய காலமானது ஈழத்தின் அரசியல், சமூகம், வரலாறு பொறுத்து மிகவும் முக்கியம் பெற்றதும் இத்துறையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்ட காலப்பகுதியாகவும் காணப்படு கின்றது. அரசியல் ரீதியில் டொனமூர் அரசியல் திட்டமும் அதனால் ஏற்பட்ட மாற்றங்களும் காணப்பட, சமூக ரீதியில் பழைய சம்பிரதாயங்கள், மரபுகள், மூடநம் பிக்கைகள் போன்றவற்றினைத் தகர்த் தெறிய வேண்டியநிலை ஏற்பட்டது. அவ்வாறே பொருளாதார ரீதியில் யாழ்ப்பாணத்தினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும் காணப்பட்டது. எனவே இத்தகையதொரு பின்னணியில் இத்தகைய பத்திரிகைகளின் தோற்றமானது இலங்கையில் இடம்பெறுகின்றது. இவற்றின் மூலமாக யாழ்ப்பாணத்தில் அச்சமயத்தில் இடம்பெற்ற பொருளாதார நடவடிக்கைகள் பற்றியும். அவை தமிழ் மக்களது வாழ்வியலில் வகித்திருந்த பங்கு பற்றியும், சமகாலத்தில் காணப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைகள் பற்றியும், அத்தகைய பிரச்சினைகளைத் தீர்க்கின்ற வழிகள் பற்றியும் செய்திகளைப் பிரசுரித்து வந்தன. அவ்வகையில் அக்கால யாழ்ப்பாண தேசத்தின் பொருளாதாரத்தினது வழிகாட்டியாகப் பேசப்படுகின்ற இப் பத்திரிகைகள் யாழ்ப்பாணப் பொருளாதார முன்னேற்றத்தின் அச்சாணியாகவும் விளங்கின எனலாம்.

ஈழகேசரி, வீரகேசரி, தினகரன் ஆகியவற்றினது தோற்றம் 1930ஆம் ஆண்டு காலப்பகுதியினை அடுத்த சுமார் 25 வருட காலப்பகுதியினை அறிஞர்கள் தமிழ் நாவல் இலக்கிய வரலாற்றில் பத்திரிகைக் காலம் என்பர். (சுப்பிரமணியம்,நா., 1977, ப.03) இத்தகையதொரு பத்திரிகைக் காலத் தினைத் தனக்குள் உள்ளடக்கிய வகையிலேதான் ஈழகேசரிப் பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது. தென்னிந்தியாவில் பத்திரிகைக்காலங்களை மணிக்கொடிக் காலம், சரஸ்வதிகாலம் எனக் குறிப்பிடுவ தனைப் போன்று ஈழத்திலும் தனக்கென ஒரு

காலப்பகுதியினை ஏற்படுத்தி அது சிறிய காலமெனினும் அக்காலகட்டதிலே புதுமைகள், புரட்சிகள் செய்து நினைவில் நிற்பது ஈழகேசரியே. அவ்வகையில் 1930யூன் 30 இல் தனது வார வெளியீட் டினை முதன் முதலாக ஆரம்பித்த இப்பத்திரிகையானது தொடர்ந்து 1958 வரை 28 வருடங்கள் சிறப்பாகத் தனது பணிகளைச் செய்து வந்தது. இப்பத்திரிகை யானது நா. பொன்னையா என்பவரினால் ஆரம்பிக்கப்பட்டு அவருடைய சொந்த அச்சகமான திருமகள் அழுத்தகத்திலிருந்து வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. இது ஒரு வாராந்தப் பத்திரிகையாக இருந்தாலும்கூட அக்காலத் தமிழ் மக்களது சகலதுறை வளர்ச்சியிலும் பெரும்பங்கினை ஆற்றி யிருந்ததெனலாம். யாழ்ப்பாணத்தில் தோற்றம் பெற்ற முதலாவது பிரதேசப் பத்திரிகையாகக் கருதபபடுகின்ற இப்பத்திரி கை அரசியல் சூழலை ஏனைய சூழலி லிருந்து பிரித்துப் பாராமல் பொருளாதார, சமூக, கலை, இலக்கியப் பண்பாட்டுச் சூழலுடன் ஒருங்கிணைத்துப் பார்த்த தென்றே கூறுதல் வேண்டும். எந்த ஒரு அரசியல் கட்சியினது பின்னணிகூட இதற்குக் கிடையாது. (உதயன், 2002 மார்ச்சு, 18, ப03) தொடர்பு சாதன வசதிகள் குறைந்த அக்காலத்தில் ஈழகேசரியின் சேவை அவசியமான தொன்றாகக் காணப்பட்டது. ஈழகேசரி புதினங்களை வெளிப்படுத்துகையில், மிகவும் சிறப்பான முறையில் அதனை விளங்க வைக்கின்ற தன்மை கொண்டதாகக் காணப்பட்டது. புதினங்களில் உள்ளூர் புதினங்களுக் குத்தான் அதிகளவு முக்கியத்துவத்தைப் கொடுத்திருந்தது.

சுப்பிரமணியச் செட்டியாரினை ஆசிரிய ராகக் கொண்டு 1930 இல் கொழும்பி லிருந்து வெளிவர ஆரம்பித்த தமிழ் பத்திரிகையே வீரகேசரி. இவர் தனது மக்களுடைய பெயரினையே பத்திரிகைக்கும் சூட்டினார். (சிவகுருநாதன்,இ.,2001,ப.72) ஆரம்பத்தில் இந்தியர்களது நலன்களையே கருத்தில்கொண்டு ஆரம்பிக்கப்பட்ட தென்றாலும் பின்னாளில் ஈழத்தமிழ் மக்களது சகலதுறை சார்ந்த வளர்ச்சியிலும் படிப்படியாகத் தன்னை இணைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. உண்மையில் தமிழ் மணவாசனை குறைந்த தலை நகரத்திலிருந்து இப்பத்திரிகையானது வெளிவந்திருந்தாலும் கூட யாழ்ப்பாணச் செய்திகளுக்கும் குறிக்கப்பட்ட இடத்தினை வழங்கியிருந்தது. குறிப்பாக தனியான தொரு பக்கத்தினையும் யாழ்ப்பாணச் செய்திகளுக்கு அது ஒதுக்கியிருந்தது. முகப்புச் செய்திகளாகவும் தகவல்களை வெளியிட்டு வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்த தமிழ் மக்களில் அனேகர் தென்னிலங்கையில் பல்வேறு தொழில் களைப் புரிவதன் பொருட்டுத் தங்கியிருந்தமையின் பின்னணியில் அவர்களுக்கு யாழ்ப்பாணத்தினுடைய தகவல்களை அவ்வப்போது தெரிவிக்க வேண்டிய பொறுப்பும் ஒரு தமிழ் பத்திரிகை என்ற வகையில் அதற்கு இருந்தது. இது ஒரு தினசரிப் பத்திரிகையாகவே தொடர்ந்து வெளிவந்தது. ஏறத்தாள ஈழகேசரியினது நோககங்களையே இதுவும் கொண்டிருந்தது. காரணம் இரு பத்திரிகை களும் தோன்றிய சூழல் ஒரே தன்மையில் காணப்பட்டதே.இதனது சிறப்பு யாதெனில் தற்போதும் தொடர்ச்சியாக வெளிவந்து புதுப்பொலிவுடன் தமிழ் பேசும் மக்களது கைகளில் கிடைத்துக்கொண்டிருப்பதே.

1932 மார்ச்சு 15இல் தினகரன் பத்திரிகை உதயமானது. அன்றிலிருந்து இன்றுவரை வீரகேசரியினைப் போன்று தொடர்ந்து இப்பத்திரிகையும் வெளிவந்த கொண்டிருப்பது இதனது சிறப்பம்சமாகும். இப்பத்திரிகையினை ஆரம்பித்த டீ.ஆர். விஜேயவர்த்தனாவினுடைய நோக்கமானது தமிழர்களைத் தேசிய அரசியலில் இழுப்பதும் இனவாதத்தினைத் தடுப்பது மாகும். இதனைத் தினகரன் இதழின் முதலாவது ஆசிரியத் தலையங்கமே புலப்படுத்தும்.(1932 மார்ச்சு15, ப.02)

இப்பத்திரிகையின் மற்றொரு சிறப்பு யாதெனில் சிங்களவரால் தமிழ் மக்களுக்காக நடாத்தப்பட்ட பத்திரிகை யென்பதே. தொடக்கத்தில் இதனது விற்பனையானது குறைவாகக் காணப்பட்டபோதும் இதனை நிறுத்தாமல் தொடர்ந்து வெளியிட்டு வந்தனர். முற்குறிப்பிடப்பட்ட ஏனைய பத்திரிகைள் இரண்டும் தமிழகத்தினை நோக்கியவையாகக் காணப்பட அதிலிருந்து சற்றவிலகி ஈழத்தமிழர்களது நடவடிக்கை களில் பங்கெடுத்துக்கொண்ட பத்திரிகை களிலொன்றாகத் தினகரன் காணப்படு கின்றது.

2. பத்திரிகைகளும் யாழ்ப்பாணப் பொருளாதாரக் கட்டமைவும்

யாழ்ப்பாணச் சமூக அமைப்பில் அக்காலத்திலும் சரி தற்காலத்திலும் சரி விவசாயமே பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. இப்பத்திரிகைகள் வெளிவந்த காலப்பகுதியில் கைத்தொழில் துறையானது பெருமளவிற்கு விருத்தியடையவில்லையென்றே கூறுதல் வேண்டும். குடிசைக் கைத்தொழில்கள் தேசத்தின் பல பகுதிகளிலும் காணப்பட்டன. இவற்றினைவிட மலையாளப் புகையிலை வருமானம், மலாயாவிலிருந்து கிடைக்கப் பெற்ற வருவாய் போன்றன யாழ்ப்பாணத்திற்கு வருவாய் தருகின்ற பிரதான மூலங்களாகக் காணப்பட்டன. இருப்பினும் அக்காலப்பகுதியின் பொருளா தார நிலையானது உறுதியற்றதாகவே விளங்கியிருந்தது. இத்தகைய உறுதியற்ற நிலையில் திகழ்ந்த யாழ்ப்பாணத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புகின்ற பணியில் இப்பத்திரிகைகள் மூன்றும் தங்களையும் ஒருவராக இணைத்துக் கொண்டது. தொடர்புசாதன வசதிகள் குறைந்திரந்த அக்காலகட்டத்தில் பத்திரி கைகளே பிரதான, மலிவான தொடர்பு சாதனமாகக் காணப்பட்டது. இதனால் விவசாயம்சார்ந்த செய்திகள்பலவற்றினை இவை வெளியிட்டு மக்களுக்கு அது தொடர்பான பல்வேறு தகவல்களை வழங்கியது.

நமது தேசமானது மேன்மையடை வதற்கு தமிழ் பேசும் மக்களாகிய நாம் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி 1931இல் ஈழகேசரிப் பத்திரிகை வெளியிட்ட கட்டுரையொன்றில் பின்வரு மாறு குறிப்பிடப்பட்டிருந்தது.

“நாம் எல்லோரும் சுயநலமே முதன்மை யாகக் கொண்டு நாம் நல்லாயிருக்கச் சுகமான வழிவகை களிறங்குவோ மேயானால் நமது தேசம் ஒருக்காலும் முன்னிலையில் வரமாட்டாது. எங்களால் எங்களது தேசத்திற்கு ஆகவேண்டிய கடமைகளை நாங்கள் செவ்வனேயுணர்ந்து செய்வோமானால் எங்களது தேசம் முன்னேறுவதற்கு, ஒருவித ஆட்சேபமுமில்லை. “(ஈழகேசரி, 1931 மார்ச்சு 18, ப.04)

3. விவசாயம்

யாழ்ப்பாண மக்களது விவசாய நடவடிக்கைகளில் நெல், மிளகாய், புகையிலை என்பன பிரதான இடத்தினை வகிக்கின்றன. அவ்வகையில் விவசாயம் பற்றியும் விவசாய நடவடிக்கைகள் தொடர்பாக விவசாயிகள் எதிர்நோக்கிய சவால்கள் பற்றியும் இப்பத்திரிகைகளில் செய்திகள் பல காணப்படுகின்றன. பொதுவாக விவசாயிகளை இப் பத்திரிகைகள் மூன்றும் கமக்காரர் என்றே அழைப்பதனைக் காணலாம்.

யாழ்ப்பாண விவசாயிகள் இப்பத் திரிகைகள் மூன்றும் வெளிவந்த காலத்தில் எதிர்நோக்கிய முக்கியமான பிரச்சினை நீர் பற்றாக்குறையே. அக்காலப்பகுதியில் குளங்கள், கால்வாய்கள் போன்றன புனர மைக்கப்படாமல் காணப்பட்டன. எனவே இவற்றினைத் திருத்தி விவசாயிகளுக்கு வழங்கி யாழ்ப்பாண மக்களது பிரச்சினை களைத் தீர்த்து உதவுமாறு அரசினைக்

கேட்டுப் பல கட்டுரைகள் இப்பத்திரிகை களில் வெளிவந்துள்ளன. குறிப்பாக நிலாவரைக் கிணற்றிலிருந்து நீரினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு நீண்டகாலமாக எடுக்கப்பட்டுவந்த முயற்சி யானது 1941இல்தான் நிறைவேற்றப்பட்டது. இவ் விடயமாகப் பின்வரும் தகவ லொன்றினை இப்பத்திரிகைகளிலொன்றான ஈழகேசரியி லிருந்து பெறமுடிகின்றது.

"யாழ்ப்பாண விவசாய முயற்சியின் சரித்திரத்திலேயே வியாழக்கிழமையானது ஒரு முக்கியமான நாளாகும். நுலாவரைக் கிணற்றிலிருந்து நீர் இறைக்கப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு மேலாக விவசாயம் செய்யப்படாமலிருந்த ஆயிரம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசனம் கிடைத்தது "(ஈழகேசரி 1946 யூன் 19,ப.04)"

மேலும் நிலாவரைக் கிணற்றிலி ருந்து மட்டுமன்றி ஊரெழுவிலுள்ள பொக்கனை, மானிப்பாயிலுள்ள இடிகுண்டு என்பனவற்றி லிருந்தும் நீரினைப் பெற்றுக் கொள்ளு வதற்கான ஏற்பாடுகள் செய்யப் பட்டதனை தினகரனின் வாயிலாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. (தினகரன் 1946 யூன் 20, ப.02) இப்பத்திரிகையானது தமிழருக்காகப் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை என்பதனால் தமிழரது செய்திகளை மட்டுமன்றி தமிழர்களது அரசியல், சமய அபிலாசை களையும் பிரதிபலிக்க வேண்டுமென மக்கள் எதிர்பார்த்தனர். தினகரன் ஒரு கட்சி சார்பான பத்திரிகையும் இல்லை. இப்பத்திரிகை குறிக்கப்பட்ட சமூகத்தினரால் ஆரம்பிக்கப்பட்டு அவர்களுக்காக நடாத்தப்பட்ட பத்திரிகையும் இல்லை. சிங்களவர் ஒருவர் தமிழர் முஸ்லிம்களாகிய தமிழ் பேசும் மக்களுக் காக நடாத்தப்பட்டது.

இப்பத்திரிகைகள் மூன்றும் வெளிவந்து கொண்டிருந்த காலப்பகுதியில் யாழ்ப் பாணத்தில் பரவலாகப் பேசப்பட்ட மற்றொரு திட்டம் பரவைக் கடல் திட்டமாகும். அக்காலத்தில் தமிழ் அரசியல் தலைவர்களி லொருவராக விளங்கிய க.பாலசிங்கம் அவர்கள் இவ்விடயமாகப் பெருமளவிற்கு அக்கறைகொண்டவராக விளங்கினார். யாழ்ப்பாணக்குடாநாடு முழுவதிலுமுள்ள உப்பு நீரினைச் சுத்த நீராக்குவதே இதனது பிரதான நோக்கமாகும். வலிகாமம் கிழக்குப் பகுதியினைச் சேர்ந்த மக்களில் சிலர் மேற்கூறப்பட்ட விடயமாக அரசாங்கத்திற்கு மனுவினையும் செய்திருந்தனர். அவ் வகையில் இத்திட்டம் பற்றிய தகவ லொன்றினை தனது வெளியீடொன்றில் பின்வருமாறு ஈழகேசரி வெளியிட்டிருந்தது.

"நீண்டகாலமாக ஆலோசனை செய்துவந்த யாழ்ப்பாணப் பரவைக்கடல் திட்டம் சம்மந்தமான வேலை நீர்ப்பாசனப் பகுதியினரால் இவ்வாரம் ஆரம்பிக் கப்படும்........ வடமராட்சிப் பரவைக் கடலிலுள்ள உப்புத் தண்ணீரை நல்ல தண்ணீர் வாவியாக மாற்றத் தொண்ட மானாற்றில் அணைகட்ட பத்து இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. "(வீரகேசரி, 1947, யூலை6,ப.02)

ஏறத்தாள இதே தகவலை சமகாலத்தில் வெளிவந்துகொண்டிருந்த வீரகேசரி பத்திரிகையும் வெளியிட்டதனை அதன் ஒரு வெளியீட்டிலிருந்து அறிய முடிகின்றது. (வீரகேசரி,1947,யூலை6,ப.04)

1953 இல் அரசாங்கமானது யாழ்ப்பாணக் கடலேரித்திட்ட வேலை களைத் துரிதப்படுத்தியது. இக்காலப் பகுதியில் இதனது மற்றொரு பகுதி வேலை யும் தொடங்கப்பட்டது. ஆனையிறவுப் பரவைக் கடலைச் சுத்தமாக்கி நீர் ஏரியாக்குகின்ற வேலையும் அங்கிருந்து தொண்டைமானாறு வரை வெட்டவுள்ள பெரிய வாய்க்காலுக் கான வேலையும் மும் மரமாக அக்காலப் பகுதியில் நடைபெற்று வந்தன. இவற்றின் மூலமாக யாழ்ப்பாணத் தில் மிகப் பெரிய விவசாயப் பிரதேசமொன்றினை உருவாக்குவது

அரசினது நோக்கமாகக் காணப்பட்டது. (தினகரன், 1947. யூலை7,ப. 03)

யாழ்ப்பாண விவசாயிகளில் பலர் ஏழைகளாகக் காணப்பட்டதனால் அதிக வட்டிக்கு பணத்தினைப் பெற்று அவர்கள் விவசாயத்திலீடுபடுவதனைத் தடுக்கின்ற நோக்கத்துடன் அரசாங்கத்தினால் குறைந்த வட்டிக்குக்கடன் கொடுக்கின்ற நோக்கத் துடன் பல பகுதிகளிலும் "வடஇலங்கை ஐக்கிய சங்கங்கள்" என்ற பெயரில் சங்கங் கள் ஆரம்பிக்கப்பட்டன. யாழ்ப்பாண விவசாயிகளுக்கு அமெரிக்க அரசாங்கம் உதவி செய்வதற்கு நேரடியாக முன்வந்தமை தொடர்பான விபரமொன்று 26.01.1950 வெளிவந்த வீரகேசரியில் காணப்படுகின்றது. (வீரகேசரி,26.01.26,ப.01) யாழ்ப்பாண விவசாயிகள் யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றிப் பூநகரி, கிளிநொச்சி உள்ளிட்ட வன்னிப் பகுதிகளிலும் பெருமளவு காணி களை உடமையாகக் கொண்டிருந்தனர். இதனால் 1942இல் அரசாங்கத்தினால் அக்குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து நெல், வைக்கோல் போன்றனவற்றினைக் கொண்டு வருவதற்குத் தடை விதிக்கப் பட்டிருந்தது.

எனவே இதற்கு எதிராக அக்காலப் பகுதியில் வளிவந்த தமிழ் பத்திரிகைகளி லொன்றான ஈழகேசரியானது தனது கருத்தினைப் பின்வருமாறு முன் வைத்திருந்தது.

"கிளிநொச்சி, பரந்தன் முதலிய விடங்களில் காடுகளை வெட்டி வயல்களாக்குவதற்கு கமக்காரர் செலவிட்ட பணம், அடைந்த சிரமம். இவர்களை ஊக்கப்படுத்தாமல் அரசு தடைகளை ஏற்படுத்துவது முறையல்ல. "(ஈழகேசரி, 1942 ஒக்ரோபர 04,ப.04)

1950 அளவில் யாழ்ப்பாணத்தில் காலநிலை பாதிப்படைந்தமையினால் அறுவடை குறைந்தபோது அரசாங்கத்திடம் கமக்காரர்களுக்கு நிவாரணம் வழங்குமாறு இப்பத்திரிகை கோரிக்கையினை விட்டிருந் தது. மேலும் நெல்லினைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்திலே மிளகாய் உற்பத்தி யானது விவசாயத்தில் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. பச்சைமிளகாய் பெருமளவில் இங்கு உற்பத்தி செய்யப் பட்டது. அதேநேரத்தில் காய்ந்த மிளகாய் இறக்குமதியானது. அக்காலப் பகுதியில் வெங்காய உற்பத்தியும் யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளிலும் செய்கை பண்ணப்பட்டது. மேலும் புகையிலைச் செய்கையும் யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் பிரதான இடத்தினை வகித்திருந்தது. இது போர்த்துக்கேயரது வருகையுடனேயே நாட்டில் அறிமுகங் செய்யப்பட்டிருந்தது. (Seneve ratne,S., 1996, p.223) இக்காலப் பத்திரிகைகளி லொன்றான ஈழகேசரியில் விவசாயப் பயிர்கள் தொடர்பான செய்திகள் பரவலாக அடிக்கடி வெளிவந்திருந்தாலும் கூட அவற்றில் புகையிலைச் செய்கை பற்றிய செய்திகளே பிரதான இடத்தினைப் பெற்றிருந்தன. உள்நாட்டு வளங்களில் பனை வளத்தினைப் பாதுகாப்பதற்கான அவசியத்தினையும் தனது வெளியீடுகளில் அது தெரிவித்து வந்தது. அவற்றிலொரு செய்தியானது பின்வருமாறு அமைந் திருந்தது.

"நாட்டினது பொருளாதார நிலை யினைச் சீர்படுத்த உதவுங்கள். கல்வி கற்ற உத்தியோகத்தரைத் தேடி நிற்கின்ற மக்கள் ஒவ்வொரு கிராமத்திலும் பத்துப்பேர் கொண்ட கூட்டுறவுச்சங்க மொன்றினைத் தாபித்து பனை மரங்களைக் குத்தகைக்குப் பெற்று பதநீர் சேர்த்துப் பனங்கட்டித் தொழிற்சாலை மேற்கொள்ளலாம் "(ஈழகேசரி, 1933 மார்ச்சு 12,ப.06)

இத்தகைய பனை வளமானது தேவையின்றி அழிக்கப்பட்டு வருவதனை ஈழகேசரியானது அவ்வப்போது கண்டிக்கத் தவறவில்லை. குறிப்பாகக் கல்லோயாக் குடியேற்றத் திட்டத்தின் பொருட்டு அதிகளவு பனைகள் அக்காலப்பகுதியில்

தறித்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 1951இல் இதன் பொருட்டு ஏறத்தாள 25000 பனைகள் தேவைப்பட்டிருந்தன. இவற்றினை விற்க முன்வந்த யாழ்ப்பாண மக்களை ஈழகேசரி எச்சரித்தது. அது அராபியர்களுக்குப் பேரிச்சம்பழம் எப்படிப் பிரயோசனமாகக் காணப்படுகின்றதோ அவ்வாறே வறண்ட பிரதேசமாகிய யாழ்ப்பாணத்து மக்களுக்கு பனை மரங்கள் இன்றியமையாதவை எனக் கூறுகின்றது. (ஈழகேசரி, 1951செப்ரெம்பர்02, ப.01)

பனை வளத்தினுடைய சிறப்புக்கள் பற்றிச் சமகாலத்தில் வெளிவந்து கொண்டிருந்த மற்றைய இரு பத்திரிகைகளான தினகரன் மற்றும் வீரகேசரியிலும் மேற்கூறப்பட்ட தகவல்கள் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

4. கைத்தொழில்கள்

குடிசைக் கைத்தொழில்கள் யாழ்ப்பாணத்தினது பல பகுதிகளிலும் நடைபெற்று வந்ததுடன் பாரிய கைத்தொழில்கள் தொடங்குவதற்கான ஆரம்ப முயற்சிகள் பல இப்பத்திரிகைகள் வெளிவந்த காலப் பகுதியில் நடைபெற்றமைக்கான தகவல்களை இவை தருகின்றன. அவ் வகையில் சீமேந்துத் தொழிற்சாலையானது இப்பத்திரிகைகளது காலத்தில்தான் யாழ்ப்பாணத்தில் முளைவிட ஆரம்பித்தது. 1930இல் இத்தொழிற்சாலையினை ஆரம்பிப்பதற்கான இடங்கள் பல தெரிவு செய்யப்பட்டபோதும் இறுதியாகக் காங்கேசன்துறையே பொருத்தமான இடமாகத் தெரிவு செய்யப்பட்டு அதற்காக 25000 ரூபாவும் ஒதுக்கப்பட்டது. இங்கு உற்பத்தி செய்யப்பட்ட சீமேந்தினை கிழக்குப் பாகிஸ்தானில் உள்ள நிலையமொன்று கொள்வனவு செய்தமை பற்றிய குறிப்புக்களை இப்பத்திரிகைகள் தருகின்றன. (ஈழகேசரி, 1951 மார்ச்சு 11,ப.01, தினகரன், 1951 மார்ச்சு 04, ப.05)

யாழ்ப்பாணத்தினது கைத்தொழில்களை விருத்தி செய்வதற்கான பல்வேறு ஆலோசனைகளையும் அவ்வப்போது தனது வெளியிடுகளில் இப்பத்திரிகைகள் தெரிவித்து வந்தன. இவை தென்னந்தும்பு உற்பத்தி, தீப்பெட்டி உற்பத்தி, கண்ணாடி உற்பத்தி போன்ற தொழில்களை மேற்கொள்ளுமாறு கூறுகின்றன. வடமாகாணத்தில் 1843 இல் 18714 நெசவுத்தறிகள் காணப்பட்டதாகவும் 1925இல் அது 423 தறிகளாக வீழ்ச்சி கண்டதாகவும் இப்பத்திரிகைகளலொன்றான ஈழகேசரி கூறுகின்றது. (ஈழகேசரி, 1931 யூலை 29, ப.01) இப்பத்திரிகையில் யாழ்ப்பாணப் பொருளாதார வீழ்ச்சிக்குப் பல காரணங்கள் அவ்வப்போது கூறப்பட்டாலும் கே. கந்தையா என்பவர் ஈழகேசரியின் ஊடாகத் தனது கருத்தினைக் கூறும்போது இங்கு நீர்ப்பாசனவதிகள் குறைவு என்றும் கிழக்கு மாகாணம் தனிமைப் படுத்தப்பட்டுள்ளதெனவும் வடபகுதியில் உள்ள துறைமுகங்கள் பல திறக்கப்படாமையினையும் காரணங்களாகக் கூறுகின்றார். (ஈழகேசரி, 1947ஏப்ரல் 06,ப.01) ஈழகேசரி வெளிவந்த காலத்தில் யாழ்ப்பாணத்திலிருந்து பல சிறிய படகுகள் கிழக்கு மாகாணத்திற்கும் வன்னிக்கும் வந்துசென்றன. இவை அப்பகுதிகளுக்குப் பணம் பொருட்களைக் கொண்டு சென்று கொடுத்துவிட்டுப் பதிலுக்கு அங்கிருந்து நெல்லினைக் கொண்டு வந்தன. யாழ்ப்பாணத்தினது ஒடியல், பனாட்டு என்பனவற்றுக்கு கிழக்குப் பகுதிகளில் வரவேற்புக் கிடைத்ததுடன் தம்பலகாமம் நெல்லுக்கு யாழ்ப்பாணத்தில் மதிப்பு இருந்தமையும் குறிப்பிடத்தக்கது. பனை மரங்களது குற்றிகள் யாழ்ப்பாணத்தில் அச்சமயத்தில் காணப்பட்ட சில துறை முகங்கள் வாயிலாக தென்னிந்தியாவிற்கும் அனுப்பப்பட்டன. (தினகரன், 1950 மே.07)

யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தில் சுருட்டுக் கைத்தொழிலும் பிரதான இடத்தினைப் பெற்றிருந்தது. யாழ்ப்பாண

மக்களது நீண்டகால குடிசைக் கைத் தொழில்களில் சுருட்டுக்கைத் தொழிலும் ஒன்று. வயது வேறுபாடுகளின்றி பல ஆண்களும் இதில் ஈடுபட்டு வந்தனர். யாழ்ப்பாணத்தில் அல்வாய், கொக்குவில், கோண்டாவில், வேலனை, அனலைதீவு, இணுவில், தாவடி, சுதுமலை, ஆனைக்கோட்டை, உரும்பிராய், குரும்ப சிட்டி போன்ற இடங்களில் புகையிலை உற்பத்தியும் சுருட்டுக் கைத்தொழிலும் நடைபெற்று வந்தன. இப் பத்திரிகைகள் வெளிவந்துகொண்டிருந்த காலப் பகுதியில் இலங்கையின் மொத்த சுருட்டுக் கைத்தொழிலாளர்களில் 70 சதவீதமான வர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்துள்ளனர். மேலும் அக்காலப்பகுதியில் இங்கே ஏறத்தாள 20இற்கும் மேற்பட்ட சுருட்டு வகைகள் உற்பத்தியாகின என்பதும் குறிப்பிடத்தக்கது (வீரகேசரி, 1951 ஏப்ரல்08, ப.02)

இப்பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்த காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தினது சுருட்டுக் கைத்தொழிலில் வீழ்ச்சிப் போக்கொன்று காணப்பட்டதனை அவை தருகின்ற தகவல்களின் வாயிலாக அறிய முடிகின்றது. அத்தகவல் வருமாறு

"யாழ்ப்பாண நகர்வாசிகளான நமது சகோதரர் முற்காலந்தொட்டுப் பல ஆண்டு களாய் முதன்மை பெறவும் முன்னோராற் புகழப்படவும் முதற் காரணமாய் இருந்த சுருட்டுக்கைத்தொழிலின் தற்கால அதிசய வீழ்ச்சியானது எம்மவரின் சகிக்கரிய அபாயத்திற்குக் காலாயிருக்கின்றது "(ஈழ கேசரி, 1931மார்ச்சு18,ப.04)

இக்கைத்தொழிலின் வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாகக் கருதப்படுவது அக்காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட பிற நாடுகளினது சிகரெட் ஆகும். இறக்குமதி செய்யப்பட்ட சிகரெட் 5 சதமாகவும் சுருட்டு 1 சதமாகவும் இருந்தாலும் அனேகர் சிகரெட்டினையே விரும்பி வாங்கினர். எனவே இத்தகையதொரு நிலையில் மாற்றங்கள் ஏற்பட வேண்டுமாயின் யாழ்ப்பாணத்தில் புகையிலைத் தொழிற்சாலையொன்று அமைக்கப்பட்டு அங்கே பலவிதமான சுருட்டுக்கள் உற்பத்தி செய்யப்பட வேண்டுமெனவும் கூறுகின்றது. (ஈழகேசரி,1935மே20,ப.06) 1933 வரை இலங்கையில் சுருட்டுத்தொழிலுக்காக எவ்விதமான கூட்டுறவுச் சங்கங்களும் அமைக்கப்படவில்லை. என்றாலும் ஐக்கிய நாணய சங்கங்களது ஆதரவில் "யாழ்ப்பாண மலையாள புகையிலை வியாபாரச் சங்கம்" என்பது அமைக்கப் பட்டிருந்தது. இவ்வாறு உருவாக்கப்பட்ட சங்கங்களுக்கு இடையிலும் ஒற்றுமை காணப்படாமை யினால் குறிப்பாக வடஇலங்கைச் சுருட்டுத் தொழிலாளர் சங்கங்களுக்கிடையிலே காணப்பட்ட ஒற்றுமையின்மையினால் அதில் பிளவுகள் ஏற்பட்டன. இத்தகைய பிளவு பற்றி இப் பத்திரிகைகளிலொன்றான ஈழகேசரியானது தனது கருத்தினைப் பின்வருமாறு முன்வைத்தது.

"சுருட்டுத் தொழிலாளர் மத்தியில் தோன்றியுள்ள தொழிற்சங்கங்கள் என்ற பெயரில் போட்டி போட்டுக்கொண்டு கிளம்பிய நான்கு ஸ்தாபனங்களும் அவர்களின் பெலத்தினைக் குறைக்கின்றன. இதற்கு இவை அரசியல் கட்சிகளது மூலவேரிலிருந்து கிளம்பியமையே காரணம் "(ஈழகேசரி, 1955யூலை10, ப.07)

5. மலையாளப் புகையிலை வியாபாரம்

மலையாளப் புகையிலை வியாபார மென்பது அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணத் திற்கு வருவாயினைத் தரக்கூடியதான வெளிநாட்டு வருமான மூலமாகக் காணப் பட்டது. இத்தகைய வியாபாத்தினுடைய தன்மைகள், அதில் ஏற்பட்ட தடைகள், அதற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றினை இப்பத் திரிகையானது தருகின்றது. இத்தகைய

வியாபாரத்தின் ஊடாக அரசிற்குக் கிடைத்த வருவாய்கள் தொடர்பாகப் போர்த்துக் கேயரது ஆட்சியி லிருந்தே குறிப்புக்கள் காணப்படு கின்றன. 17ஆம் நூற்றாண்டில் புகையிலைச் செய்கை, வியாரம், சுருட்டுக் கைத்தொழில் போன்றன இலாபந்தருகின்ற தொழில்களாகக் காணப்பட்டன. (பத்ம நாதன்,சி.,2001,ப.03) யாழ்ப்பாணத்தில் உற்பத்தி செய்யப்பட்ட புகையிலையானது தென்னிலங்கைக்கு மட்டுமன்றி சுமாத்திரா மற்றும் இந்தியாவிலுள்ள திருவாருங் கூருக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. (Bancil., B.,1971,ப.292) இவ்வாறு ஏற்றுமதி செய்யப்பட்ட புகையிலைக் கொண்டுதான் அச்சமயத்தில் யாழ்ப்பாணத்தில் பற்றாக் குறையாகக் காணப்பட்ட அரிசி மற்றும் ஏனைய உணவுப் பொருட்கள் என்பன இறக்குமதி செய்யப்பட்டன எனலாம்.

இத்தகைய மலையாளப் புகையிலை வியாபாரமானது ஆங்கிலேயரது ஆட்சிக் காலத்தின் இறுதியளவில் பல்வேறு நெருக்கடிகளைச் சந்தித்தமை பற்றி இப்பத்திரிகையின் ஊடாக அறிய முடிகின்றது. 1950இல் திருவாங்கூரிலிருந்த விவசாயிகள் நிதி நெருக்கடியினை எதிர்நோக்கியதனால் அச்சமயத்தில் அவற் றினை விறபனை செய்ய முடியவில்லை. மேலும் அப்பகுதிக்கு கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலிருந்து புகையிலை அனுப்பப்பட்டதனால் யாழ்ப் பாணத்தவரது புகையிலைக்குப் பலத்த போட்டியும் இருந்தது.

இவ்விடயத்தினை ஈழகேசரியின் வெளியீடொன்று பின்வருமாறு விபரிக் கின்றது.

"திருவாங்கூரில் தேங்காய் நல்ல நிலையில் விற்கப்பட்ட காலத்தில் எம் புகையிலை அங்கு மனமாக விற்கப்பட்டது. ஆனால் இங்கே வியாபாரம் வீழ்ச்சியடைய மக்கள் பணப்பிரச்சினையினால் சிறந்த நல்ல புகையிலையினை வாங்கி உபயோ கிக்க முடியாது போயிற்று. இது மாத்திர மின்றி எமது சொந்தப் புகையிலை வியாபாரிமார் மலையாளப் புகையிலைச் செய்கையில் ஈடுபட்டு யாழ்ப்பாணம் அனுபவிக்கும் முறையைக் காட்டிக் கொடுத்துவிட்டனர். (ஈழகேசரி, 1935ஓகஸ்ட் 22,ப,01)

ஆரம்பகாலங்களில் பயணிகளினால் புகையிலையானது சாப்பிடுவதற்காகவே பயன்படுத்தப்பட்டது. இது நோய்களைக் குணப்படுத்தவல்லது என்ற நம்பிக்கையும் திருவாங்கூரில் காணப்பட்டது. இதன் காரணமாகவே யாழ்ப்பாணப் புகையிலை யினைப் பெற்றுக்கொள்ளும் நோக்குடன் திருவாங்கூர் அரசாங்கமானது இலங்கை அரசாங்கத்துடன் உடன் பாடொன்றினையும் செய்திருந்தது.

யாழ்ப்பாணத்திலிருந்து அனுப்பப்படு கின்ற புகையிலையினைச் சேகரிப்பதற்கு கொல்லம், ஆலப்பள்ளி ஆகிய இடங்களிலும் பாடசாலைகள் அமைக்கப் பட்டன. (வீரகேசரி, 1936 ஒக்ரோபர் 25, ப.07) ஆரம்பகாலங்களில் அரசாங்கத்தின் பொறுப்பில் இருந்த புகையிலை வர்த்தகத் திற்கு தீர்வையும் இருக்கவில்லை. இருப்பினும் சட்டவிரோதமாகப் புகையிலை திருவாங்கூருக்கு அனுப்பப்பட்டதனால் அவ்வரசாங்கம் இவ்வர்த்தகத்தில் ஈடுபடுவ தற்குத் தனியாருக்கு 1864 இல் அனுமதி யினை அளித்தது. இக் கட்டத்திலிருந்து தான் இவ்வியாபாரத்தில் தரகுமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தரகர்கள் அரசாங்கத்தினுடைய அனுமதியினைப் பெற்றே சேவையில் ஈடுபட்டனர். (ஈழகேசரி, 1931ஜனவரி01,ப.08)

1864இல் இருந்து 20 வருடங்களில் யாழ்ப்பாணத்தில் புகையிலை வியாபாரம் விருத்தியடைந்ததுடன் திருவாங்கூர் அரசாங்கத்திற்குத் தீர்வை வருமானமும் அதிகரித்தது. யாழ்ப்பாண விவசாயிகள் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் தீர்வை

வரிகள் ஒருபுறமிருக்க தரகர்களின் கொடுமையானது மறுபுறத்தில் காணப்பட்டது. இவற்றினைவிட புகையிலை பண்டக சாலைக்கு வருகின்ற சமயத்தில் காணப்பட்ட அளவு நிறையிலும் பார்க்க அவை வெளியே எடுத்துச் செல்லப்படுகின்ற போது அவற்றினது நிறையானது குறைவாகவும் காணப்பட்டது. இத்தகைய பிரச்சினைகளை யாழ்ப்பாண மலையாளப் புகையிலை வியாபாரிகள் எதிர்நோக்கிய போதும் அரசாங்கம் இது பற்றி எவ்விதமான அக்கறையினையும் கொள்ளவில்லை. ஆனால் 1934இல் மலையாளப் புகையிலை ஐக்கிய வியாபாரச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட நிகழ்வானது இவ்வியாபாரத்தில் ஏற்பட்டதொரு முக்கியமான நிகழ்வாகக் காணப்படுகின்றது. அதுவரை காலமும் வியாபாரிகளது கைகளிலிருந்த இவ்வியா பாரத்தினை இச்சங்கம் ஏற்று நடாத்த முன்வந்தது. இதனால் வியாபாரிகள், தரகர்கள் போன்றவர்களால் ஏற்படுகின்ற தொல்லைகள் குறைவடைந்தன.

இச்சங்கத்தினது தோற்றந் தொடர்பாக மகிழ்ச்சியடைந்த இக்காலப் பத்திரிகைகளிலொன்றான ஈழகேசரி தனது கருத்தினை இவ்விடயமாகப் பின்வருமாறு முன்வைக்கின்றது. அத்துடன் இச்சங்கத்தினுடைய நடவடிக்கைகளைப் பாராட்டுகின்ற ஈழகேசரி இச்சங்கத்தின் மூலமாகப் புகையிலையினை அனுப்பிப் பயனடையுமாறு வியாபாரிகளைக் கேட்டது. இச்சங்கம் தருகின்ற விளம்பரங்களையும் அவ்வப்போது இப்பத்திரிகைகள் வெளியிட்டு வந்தன.

“கமக்காரர்களுக்கு நிறைந்த நன்மையைச் செய்ய முற்பட்ட சங்கத்தை இப்போதே ஆதரித்து நிற்பது யாவரதும் கடனாகும். “(ஈழகேசரி, 1933யூலை02,ப.08)

இருப்பினும் இச்சங்கத்தினது வருகையினால் பாதிக்கப்பட்ட பலரும் இதற்கு எதிராகக் குறைகள் கூறினர். அவ்வாறு குறை கூறுபவர்களையும் ஈழகேசரி கண்டிக்கத் தவறவில்லை. (ஈழகேசரி,1934 செப்ரெம்பர்02, ப.06) அதே நேரத்தில் திருவாங்கூர் அரசாங்கம் புகையிலையின் வரிகளை உயர்த்தியமையினைக் கண்டிக்கவும் தவறவில்லை. எது எவ்வாறாயினும் மலையாளப் புகையிலை வியாபாரம் ஆரம்பித்த காலத்திலிருந்து அது ஒரு உறுதியற்ற வியாபார நடவடிக்கையாகவே காணப்பட்டது. குறிப்பாக உள்நாட்டு உற்பத்தியினை அதிகரிக்கின்ற நோக்கத்துடன் திருவாங்கூர் அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கைகளே இத்தகைய நிலைக்குக் காரணமெனலாம்.

6. சுதேசியம்

யாழ்ப்பாணத்தினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்ப வேண்டுமென்ற அக்கறை கொண்டிருந்த இப்பத்திரிகைகள் சுதேசியத்திலும் கவனத்தினைச் செலுத்தியது. அன்னியப் பொருட்களைப் பகிஸ்கரிப்பதன் மூலமாக அன்னிய நாடுகளுக்குச் செல்லவிருக்கின்ற பணத்தினைத் தடுத்து நாட்டினது பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்புவதற்கான முயற்சியிலும் அக்கறை காட்டியது. எடுத்துக்காட்டாக மண்ணெண்ணை அந்நியரது என்பதனால் அவ்விளக்கினைப் பாவிப்பதனைநிறுத்தி பதிலுக்குத் தேங்காய் எண்ணையினை உள்ளூரிலிருந்து பெற்றுப் பயன்படுத்துமாறு கூறுகின்றது. (ஈழகேசரி, 1930 செப்ரெம்பர் 24, ப.03). மேலும் இப்பத்திரிகை இறக்குமதி செய்கின்ற ஆடம்பரப் பொருட்களாக சீனி, சிகரெட், மண்ணெண்னை என்பனவற்றினைக் கருதி அதனது இறக்குமதிகளுக்குத் தடை போடவும் அரசினைக் கேட்டிருந்தது. யாழ்ப்பாண இளைஞர் காங்கிரசினது நோக்கங்களிலொன்றாகவும் அந்நியப் பொருட்களைப் பகிஸ்கரிப்பதென்பது காணப்பட்டமையினால் உரும்பிராயில் உள்ள கடையொன்றுக்குச் சென்ற இளைஞர்கள் சிலர் 1931 ஓகஸ்ட் 1இல் அங்கிருந்த சிகரெட், பீடி போன்றவற்றினைக் கொள்வனவு செய்து நாற் சந்தியில் எரித்த

சம்பவத்தினையும் ஈழகேசரி தருகின்றது. (ஈழகேசரி,1931 ஒகஸ்ட்05, ப.03)

7. நிறைவுரை

ஈழகேசரி, வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகள் மூன்றும் வித்தியாசமான இயல்புகளுடன் ஆரம்பிக்கப்பட்டவை. ஈழகேசரி யாழ்ப்பாணத்தினைத் தளமாகக் கொண்டு இலங்கைத் தமிழர்களுக்கு பயன்தரும் வகையிலும் வீரகேசரி கொழும்பினைத் தளமாகக் கொண்டு இந்தியத் தமிழர்களது நலன்களைக் கருத்தில் கொண்டும், தினகரன் பத்திரிகை சிங்களவர்களினால் இலங்ஜ கத் தமிழர்களதுநலன்களைக் கருத்தில் கொண்டும் ஆரம்பிக்கப்பட்டவை. இவை வெளிவந்த காலப்பகுதியில் யாழ்ப்பாண மானது முழுக்க முழுக்க விவசாயப் பிரதேசமாகவே காணப்பட்டது. இதனால் அக்காலப்பகுதியில் விவசாயத்தில் எதிர் நோக்கப்பட்ட பிரச்சினைகள், எடுக்கப்பட்ட தீர்வுகள், அக்காலக் கைத்தொழில் நிலை, அது வளர்க்கப்பட வேண்டியதன் அவசியம். சுதேசியம் பற்றிய தகவல்களையெல்லாம் இப்பத்திரிகைகளின் மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. அதுமட்டு மன்றித் தேசத்தினது பொருளாதாரத்தினை முன்னேற்றுவதற்கான ஆலோசனை களையும் இப்பத்திரிகைகள் வழங்கின. பொதுவாக அக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பத்திரிகைகள் எல்லாமே மதப்பிரச்சாரத்தினை முதன்மைப்படுத்திய வைகளாகவே காணப்பட இவை மூன்றும் அவற்றிலிருந்து விலகி நின்று தேசத்தின் வளர்ச்சிக்குத் தேவையான கருத்துக் களையும் முற்போக்கான சிந்தனை களையும் தமது வெளியீடுகளில் பிரசுரித்து வந்தமை குறிப்பிடத்தக்கது. அவ்வகையில் ஈழகேசரி, வீரகேசரி, தனகரன்கால (1930-1958) யாழ்ப்பாணத் தினது பொருளாதார நிலையினைப் படம்பித்துக் காட்டுகின்ற வகையில் இவற்றினது பணிகள் அளப்பரியதெனலாம்.

உசாத்துணைகள்

ஆனந்தராஜ்,ந., (2002), "சுதந்திரத்திற்குப் பின் ஈழத்தில் தமிழ் பத்திரிகைத் துறையின் வளர்ச்சி ஒரு நோக்கு", கொழும்பு: தமிழ் இலக்கியப் பெருவிழா, கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சு.

சுப்பிரமணியம்,நா., (1978), ஈழத்துத் தமிழ் நாவல் இலக்கியம், முள்ளியவளை: முத்தமிழ் வெளியீடு.

பத்மநாதன்,சி.,(2001) இலங்கைத் தமிழர் தேசவழமைகளும் சமூக வழமைகளும், கொழும்பு: குமரன் புத்தக இல்லம், சென்னை.

Bancil,P. (1971).Ceylon Agricluture, Dhanaptrai and sons; Delhi.

Seneveratne,S. (1996) . Field Crops of Ceylon, Lake House Investment Ltd, Colombo.

ஈழகேசரி, திருமகள் அழுத்தகம், சுன்னாகம்.

உதயன், உதயன் பப்ளிசேன்ஸ், யாழ்ப்பாணம்.

தினகரன், லேக்ஹவுஸ் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு.

வீரகேசரி, நியூ எக்ஸ்பிரஸ் பிறைவேட் லிமிட்டெட், கொழும்பு